4. அறிக்கைகள் அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. கே. முனிவெங்கடப்பன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993-94 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 158-ஆவது முதல் 162-ஆவது வரையிலான, 5 அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

5. மானியக் கோரிக்கைகள், 1994-95, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 2-மாநில ஆயத்தீர்வைத் துறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும் வாக்கெடுப்பும், மானியக் கோரிக்கை எண் 2 - மாநில ஆயத்தீர்வைத் துறை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மானியக் கோரிக்கை எண்.2 - மாநில ஆயத்தீர்வைத் துறை என்ற தலைப்பின் கீழ், ரூ. 8,13,75,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2044, திரு. இரா. அப்பு நடேசன்.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாரில் ஒரு மது ஒழிப்புக் காவல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மாநில ஆயத்தீர்வைத் துறை பற்றிய 2-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,13,75,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2048, திரு. ஜி. பழனிசாமி.